# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# Ang Mo Kio Tamil Methodist Church

**25 பிப்ரவரி 2024 ஞா யிறு ஆராதனை**
**25th February 2024 Sunday Service**

† ***ஆராதனைக்கு அழைப்பு*** — ***திரு. லூயிஸ் ஐசக் குமார்***
Call to Worship — Mr. Louis Isack Kumar

***இறைவணக்கப்பாடல்*** — ***பாடகர் குழு***
Introit — Choir

***ஜெபம்*** — ***திரு. லூயிஸ் ஐசக் குமார்***
Prayer — Mr. Louis Isack Kumar

† ***தொடக்க பாடல்*** — ***சபையார் இணைந்து***
Opening Song — Congregation

**இயேசுவுக்கே ஒப்புவித்தேன்**

1. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
யாவையும் தாராளமாய்
என்றும் அவரோடு தங்கி
நம்பி நேசிப்பேன் மெய்யாய்

ஒப்புவிக்கிறேன் ஒப்புவிக்கிறேன்
நேச ரட்சகா நான் யாவும்
ஒப்புவிக்கிறேன்

2. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
அவர் பாதம் பணிந்தேன்
லோக இன்பம் யாவும் விட்டேன்
இப்போதேற்றுக் கொள்ளுமேன்

3. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
முற்றும் ஆட்கொண்டருளும்
நாம் உம் சொந்தம், நீர் என்
சொந்தம்
சாட்சியாம் தேவாவியும்.

4. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்
நாதா அடியேனையும்
அன்பு பெலத்தால் நிரப்பி
என்னை ஆசீர்வதியும்

† ***மாறி வாசித்தல் 8ம் ஞாயிறு தேவ ஆராதனை புத்தகம்*** — ***சபையார் இணைந்து***
பக்கம் 25 "சங்கீதம் 24" — Congregation

"பூமியும் குடிகளும் கர்த்தருடையது"

Psalter Reading –Page 25 "Psalm 24"

† ***தந்தை போற்றி*** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

***துதி ஆராதனை***
Singspiration

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

***பரமண்டல ஜெபம்*** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

***சிறப்பு பாடல்*** — ***பாடகர் குழு***
Special Song — Choir

† ***காணிக்கை பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

**தேவ பிதா என்றன் மேய்ப்பர் அல்லோ**

தேவ பிதா என்றன் மேய்ப்பர்
அல்லோ,
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார்

1. ஆத்துமந் தன்னைக்
குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர்
நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும்

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்,
சுக தயிலம் கொண்டென்
தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார்

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய்
நிலைத்திருப்பேன்

† ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

† ***திருமறைப் பாடம்*** — ***திரு. ஆரோக்கியராஜ்***
Scripture Reading — Mr. Arokiaraj
***யோவான் 8 : 12 - 18***
John 8 : 12 - 18

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

<u>என் தேவன் என் வெளிச்சம்</u>

என் தேவன் என் வெளிச்சம்
என்னை இரட்சிப்பவரும் அவரே
என் ஜீவனுக்கரணானவர்
நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்

1. தாயும் தந்தையும் தள்ளிவிட்டாலும்
நல்ல இயேசென்னை சேர்த்துக் கொள்வார்
என்னை அவர் நிழலில் வைத்துக் காத்திடுவார்
மலைமேலேற்றி என்னை உயர்த்திடுவார்

2. தீமை செய்கின்றவர்கள் எனக்கு
தீமை செய்ய விரும்புகையில்
தேவன் அருகில் வந்து என்னை காத்து நின்றார்
என்னை பகைத்தவர்கள் உடனே அழிந்தார்கள்

3. என்மேல் யுத்தம்தான் எழும்பினாலும் நான்
நல் நம்பிக்கையாயிருப்பேன்
என் நெஞ்சம் பயப்படாமல் கர்த்தரிடத்தினில் நான்
அமைதியுடன் நாட்களை கழித்திடுவேன்

***அறிவிப்புகள்***
Announcements

<u>மனப்பாட வசனங்கள் / Weekly Memory Verses</u>

✝ மனப்பாட வசனங்கள் — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***யோவான் 8 : 12***
John 8 : 12

***12. மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** / Indicates Congregation standing